இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பத்தாவது பாராளுமன்றத்தின்

முதலாவது கூட்டத்தொடர்

## பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 490

# அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின்

# ஏழாவது அறிக்கை

(கொழும்பு மாநகர சபை குறித்து 2025.02.25, 2025.02.27 மற்றும் 2025.10.08 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கபீர் ஹஷீம் அவர்களால்
2026 மார்ச்சு மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

*2026 மார்ச்சு மாதம் 06 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் அச்சிடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டது.*

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் தொடர்பிலான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்."***

## பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்

## அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அலுவலகம்

1. கௌரவ கபீர் ஹஷீம், பா.உ. (தவிசாளர்)
2. கௌரவ எண்டன் ஜயகொடி, பா.உ.
3. கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுதபற்ற) அருண ஜயசேகர, பா.உ.
4. கௌரவ சுகத் திலகரத்ன, பா.உ.
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், பா.உ.
6. கௌரவ நலின் ஹேவகே, பா.உ.
7. கௌரவ அரவிந்த செனரத், பா.உ.
8. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ.
9. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பா.உ.
10. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
11. கௌரவ ஜே.சீ. அலவத்துவல, பா.உ.
12. கௌரவ சாமர சம்பத் தசநாயக்க, பா.உ.
13. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
14. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன, பா.உ.
15. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன், பா.உ.
16. கௌரவ சட்டத்தரணி (திருமதி) சாகரிகா அதாவுத, பா.உ.
17. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
18. கௌரவ கே. இளங்குமரன், பா.உ.
19. கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா, பா.உ.
20. கௌரவ அஜந்த கம்மெத்தகே, பா.உ.
21. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி , பா.உ.
22. கௌரவ சட்டத்தரணி (திருமதி) துஷாரி ஜயசிங்ஹ, பா.உ.
23. கௌரவ ரீ. கே. ஜயசுந்தர, பா.உ.
24. கௌரவ எம். ஏ. எம். தாஹிர், பா.உ.
25. கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.
26. கௌரவ லால் பிரேமநாத், பா.உ.
27. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
28. கௌரவ சுனில் ரத்னசிறி, பா.உ.
29. கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
30. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன, பா.உ.

## குழுச் செயலகத்தின் தற்போதைய பணியாட்தொகுதி

- திரு. சனத் விஜேகுணவர்தண - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) குழுவின் செயலாளர்
- திருமதி சமிலா ரூபசிங்க - பிரதான உத்தியோகத்தர்
- திருமதி ஆர்.ஏ.டீ.என். கியோவனி – பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு ஜே பீ.எல்.ரீ.சமீர - உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி ஜீ.டி.ஜே.எச். அயேஷ்மந்தி - பாராளுமன்ற அலுவலர்
- திருமதி ஜீ.எம். கல்லேகொட - பாராளுமன்ற அலுவலர்
- செல்வி எம்.எல்.எ.டி.எம் . குமாரி - பாராளுமன்ற உத்தியோகத்தர்

## குழு அறிக்கைகள்

**www.parliament.lk** எனும் இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பயன்படுத்தி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெளியீடுகளை தரவிறக்கம் செய்யலாம்.

Select language → Business of Parliament → Committees
Select Legislature (10th Parliament) ← Committee Reports
Select Session (1st Session) → Select Committee Type
Select Committee ← (Comittees for Special Purposes)
(Committee on Public Accounts) → Search

# <u>பொருளடக்கம்</u>

<u>பக்க இல.</u>

A. தவிசாளரின் குறிப்பு .................................................................. 1

B. சுருக்க அறிக்கை ........................................................................ 3

விசாரணையின் போது கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சினைகளின் அடிப்படையில்,

(a) கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

(c) பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்

(d) குழுவின் அவதானிப்புகள்

(e) குழுவின் விதப்புரைகள்

(f) பரிந்துரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல் தொடர்பான தகவல்கள் ........................................................................................ 4

# தவிசாளரின் குறிப்பு

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, 2025.02.25, 2025.02.27 மற்றும் 2025.10.08 ஆகிய திகதிகளில் கொழும்பு மாநகர சபை குறித்து மேற்கொண்ட விசாரணைகளை உள்ளடக்கிய இக்குழுவின் ஏழாவது அறிக்கையை, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(3)இன் ஏற்பாடுகின்படி நான் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பகிரங்க நிதிமீது கொண்டுள்ள கட்டுப்பாடுத் தத்துவங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நிதிக் கண்காணிப்புக் குழுவாகச் செயலாற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு, பொதுச் செலவுகளுக்காக பாராளுமன்றத்தால் அளிக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை வெளிப்படுத்தும் கணக்குகளையும், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பொருத்தமானதெனக் கருதப்படக் கூடியதும் பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதுமான வேறு ஏதேனும் கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரிசீலித்தல் இக்குழுவின் தலையாய பணி ஆகும்.

அந்தப் பணியை நிறைவேற்றுகையில் கணக்காய்வு எனப்படுகின்ற பின்னரான செயற்பாட்டினால் குழுவுக்குக் கிடைக்கின்ற ஒத்துழைப்பு அளப்பரியது. சரியான கணக்காய்வின் வழியாகக் கண்டறியப்பட்ட குறைபாடுகளுக்குத் தீர்வுகள் அளிக்கப்படும் அதேசமயம் வினைத்திறனின்மையை ஆக்கபூர்வமான முறையில் தடுப்பதற்காக, கடந்த கால குறைபாடுகளை எதிர்காலத்தில் தடுத்துக்கொள்வதற்கு நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டலும் இதன் வாயிலாக அளிக்கப்படும்.

கொழும்பு மாநகர சபை குறித்து 2023ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மிகத் தெளிவாக கணக்காய்வு விதப்புரைகள் தொடர்பாகவும், நிறுவத்தினால் அதுவரை போதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையை மிகப் பாரதூரமான ஒரு விடயமாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கருதி உள்ளதாலும், இவற்றுக்கு மேலதிகமாக நிறுவனத்தில் தெளிவாக இனங்காணப்பட்டுள்ள பாரதூரமான பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை இந்த விசாரணையின்போது குழுவினால் அவதானிக்கப்படடிருத்தல் போன்ற விடயங்கள் தெரிவு செய்யப்பட்ட இந்த நிறுவனம் தொடர்பாக மாத்திரம் ஓர் அறிக்கையை பாராளுமன்றத்தில் துரிதமாக முன்னிலைப்படுத்த காரணமாக அமைந்தன.

சமகாலத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, ஆரோக்கியமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்க நிறுவனங்களில் நிகழும் நிதி மோசடிகள் மற்றும் ஊழல்களைத் தடுப்பதற்குச் சரியான நகர்வுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அனைத்து அரசாங்க அலுவலர்களுக்கும் உண்டு

என்பதுடன் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் துரித கவனம் செலுத்துதல், தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட விதப்புரைகள் / உடன்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருதல் குழுமுன் அழைக்கப்படுகின்ற நிறுவனங்களில் பணியாற்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர்களின் பொறுப்பு ஆகும்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றியானது அதில் பங்கேற்றும் அனைத்து தரப்பினரதும் உயிரோட்டமான ஈடுபாட்டிலேயே தங்கி உள்ளது. ஆகவே, அரசின் நிதிப் பொறிமுறையை வலுவூட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக, கடந்த கால அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக்களில் பணியாற்றிய தவிசாளர்கள் உட்பட அங்கத்துவ உறுப்பினர்களுக்கும், குழுவின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு கட்சிபேதமின்றி எனக்கு முழு அளவிலான ஒத்துழைப்பை நல்கிவருகின்ற தற்போதைய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி உட்பட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கும், பொதுத் திறைசேரியின் அலுவலர்களுக்கும், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உட்பட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அலுவலகத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் குழு தமது நன்றியையும் பாராட்டையும் உரித்தாக்குகிறது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கபீர் ஹஷீம்**
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

## சுருக்க அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் **2025.02.25, 2025.02.27** மற்றும் **2025.10.08** ஆகிய நாட்களில் கொழும்பு மாநகர சபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை பரிசோதித்தல் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக விசாரிக்கப்பட்டதோடு, மேற்படி குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள், குழுவின் அவதானிப்புகள், குழுவில் வழங்கப்பட்ட விதப்புரைகள் மற்றும் அந்த விதப்புரைகளை நிறைவேற்றுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவை இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -

- பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- மேல் மாகாண சபை
- கொழும்பு மாநகர சபை

**விசாரணை உதவி: தேசிய கணக்காய்வு அலுவலகம்**

மேற்படி விசாரணைகளுக்கு மேற்குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கைகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் அடிப்படையாக கொள்ளப்பட்டதோடு, குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்குரிய கூடுதல் தகவல்கள் மேற்படி கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அக்கணக்காய்வு அறிக்கைகளை கீழுள்ள இணைப்பின் ஊடாக பதவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**2022 ஆம் ஆண்டு:-**

https://auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2022/locathorities/6-xiii/01.Colombo-MCS.pdf

**2023 ஆம் ஆண்டு-**

https://auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2023/local_authorities/6-XXIII/01.Colombo-MCS.pdf

**விசாரணையில் அடையாளங் காணப்பட்ட பிரதான பிரச்சனைகள் சார்ந்ததாக,**

*a.* **கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

*b.* **பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) /கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

*c.* **குழுவின் அவதானிப்புகள்**

*d.* **குழுவின் தீர்மானங்களும் விதப்புரைகளும்**

*e.* **விதப்புரைகளை நிறைவேற்றுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடல்**

## தொடர்பான விபரங்கள்

❖ கொழும்பு மாநகர சபையின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) :-
செயலாளர், பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

❖ கொழும்பு மாநகர சபையின் கணக்கீட்டு அலுவலர் (க.அ) :-
நகர முதல்வர், கொழும்பு மாநகர சபை

## 01. சோலை வரி வருமானத்தின் நிலுவைத் தொகையை அறவிடுதல்.

❖ **விசாரிக்கப்பட்ட திகதி - 2025.02.25**

a. **கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

- கொழும்பு மாநகர சபையில் வருமான நிலுவையை அறவிடுவதில் குறைபாடுகள் தொடர்ச்சியாக அவதானிக்கப்படல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் பற்று வைக்கப்பட்ட சோலை வரி வருமானங்களுக்கிடையே இடைவெளி காணப்படல்.
- கொழும்பு மாநகர சபை பயன்படுத்தும் வருமானத் திரட்டல் கணினிக் கட்டமைப்பின் மூலம் வருமான நிலுவைகளுக்கு நேர பகுப்பாய்வொன்றை பெற முடியாதுள்ளதென்பது.
- முன்னைய ஆண்டுகளின் சோலை வரி நிலுவைகள் இருக்கையில், நடப்பாண்டின் சோலை வரி அறவீட்டின் போது கட்டணக் கழிவுகள் வழங்குவதானது, நிலுவைத் தொகை செலுத்தாமல் இருப்பதற்கு ஊக்கப்படுத்துவதாக அமையுமென்பது.

**b. பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) /கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

- வருடாந்த வரவு செலவுத் திட்டத்துக்கு சோலை வரி வருமானங்களை மதிப்பீடு செய்கையில், அத் தருணத்தில் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்ட சோலை வரி செலுத்தப்படும் ஆதனங்களின் அளவு மற்றும் அந்த ஆண்டில் புதிய கட்டுமானங்களாக சேர்வதாக மதிப்பீடு செய்யப்படும் ஆதனங்களின் அளவை பரிசீலித்தல் வரவு செலவுத் திட்டமிடப்பட்ட சோலை வரி வருமானம் மற்றும் பற்று வைக்கப்பட்ட சோலை வரிமானத்துக்கிடையே இடைவெளி அதிகரிப்பதற்கு ஏதுவாக அமையுமெனவும்,
- நடப்பாண்டில் செலுத்துகைகளை மேற்கொண்டு கட்டணக் கழிவுகளை பெறுவதற்கு ஆதன உரிமையாளர்கள் அதிக விருப்பம் கொண்டுள்ளார்கள் எனவும், இன்றளவில் நடப்பாண்டு வருமானத்தில் 80% இற்கு மேற்பட்ட முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதெனவும்,
- முந்தைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரைகளுக்கமைய 2024 ஆம் ஆண்டில் 80 இற்கு மேற்பட்ட ஆதனங்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும், இச்செயன்முறையின் மூலம் 1134 மில்லியன் ரூபா நிலுவைத் தொகையை அறவிட முடிந்துள்ளதெனவும்,
- வருமானக் கணினிக் கட்டமைப்பிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆக்கப்பட்ட நேர பகுப்பொய்வொன்றின் மூலம் வருமான நிலுவைகள் காலத்துக்கேற்ப அடையாளங்காணப்பட்டுள்ளதெனவும்,
- நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ள அரச நிறுவனங்களில் சில நிறுவனங்கள் தவணை அடிப்படையில் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு இணங்கியுள்ளதெனவும், மேலும் சில நிறுவனங்கள் தமது நிலுவைத் தொகையை பதிவழிப்புச் செய்யுமாறு கோரியுள்ளன எனவும்,
- வருமான நிலுவையை அறவிட முடியாத நிலையில் காணப்படுபவை இதற்கு 10 இற்கும் 15 இற்கும் இடையிலான காலப்பகுதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு வரும் ஆதனங்கள் எனவும் ,
- ஆதனக் கணக்கெடுப்பொன்றின் மூலம் தற்பொழுது உண்மையில் காணப்படாத ஆதனங்களை அடையாளங்கண்டு அவற்றை ஆவணங்களிலிருந்து நீக்கவும் தற்போதுள்ள ஆதனங்களை சரியாக அடையாளங்கண்டு சோலை வரி நிலுவைகளுடன் கூடிய ஆதனங்களை மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சுவீகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றதெனவும்,
- மேற்படி ஆதனக் கணக்கெடுப்பு நடவடிக்கைகளில் தாமதமேற்படுவதற்கு வருமானப் பரிசோதகர்களின் பற்றாக்குறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதெனவும்,

- கொழும்பு கோட்டை பிரிவில் 10 ஆண்டுகளுக்கு மேலாக 440 மில்லியன் ரூபா வருமான நிலுவை காணப்படுகின்ற ஆதனப் பட்டியலொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும்,
- KOICA உதவித் திட்டத்தின் கீழ் சோலை வரி, வணிக வரி, வணிக உரிமங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்களுக்கு புதிய கணினிக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தி அதனை 2027 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதெனவும்

பி.க.அ./க.அ தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

ஆதன உரித்து மாற்றமொன்றின் போது 06 மாதங்களில் உள்ளூராட்சி மன்றத்துக்கு குறித்த ஆதன பதிவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென துணை விதியொன்று காணப்படுவதால் அதன் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு பொறிமுறையொன்று காணப்பட வேண்டுமென குழுவினால் வலியுறுத்தப்பட்டது..

### d. குழுவின் விதப்புரைகள்

1. ஆதனக் கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான வசதிகளை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு குழு அறிவுறுத்தல் வழங்கியது.
2. நேர பகுப்பாய்வுக்கமைய நீண்ட காலமாக காணப்படும் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முன்னுரிமை அளித்து வருமான நிலுவையை அறவிடுவதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறும்,
3. இன்றளவில் ஆதனங்களை அடையாளங் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள கொழும்பு கோட்டை பிரதேசத்தின் வருமான நிலுவையை அறவிடும் நடவடிக்கைகளை 06 மாதங்களில் நிறைவு செய்யுமாறும்,
4. இதர பிரதேசங்களுக்குரிய ஆதனக் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்யுமாறும்,
5. தற்பொழுது சேகரிக்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த தரவுகள் குறித்த அறிக்கையொன்றையும் (ஆதனங்களின் பெயர்கள், உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு ஆண்டுக்குமான நிலுவை வரிகள் உள்ளடங்கலாக) வருமான நிலுவைகள் காணப்படும் ஆதனங்கள் தொடர்பான கணக்கெடுப்பின்

திட்ட வரைபை ஒரு வாரத்துக்குள் (2025.03.04 ஆம் திகதிக்கு முன்னதாக) குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும்

குழு பரிந்துரைத்ததோடு, பி.கஅ./க.அ அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

**e. விதப்புரைகளை நிறைவேற்றுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடல்**

- ஒரு மாத காலப்பகுதிக்குள் ஏற்புடைய நிலுவையில் 25% அறவிடப்பட வேண்டுமென கொழும்பு கோட்டை பிரிவில் வருமான நிலுவையை அறவிடுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், கோரிக்கை அறிவித்தலை (Demand Notice) விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளரின் 2025.03.15 ஆம் திகதிய MT/ADM/COPA/2025 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.
- ஆதனங்கள் பௌதீக ரீதியாக காணப்படாத பட்சத்தில், அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதோடு அறிவித்தல் பெறப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பின் அச்சந்தர்ப்பங்களை வெவ்வேறாக குறிப்பிடுமாறு வருமானப் பரிசோதகர்களுக்கும் குறித்த அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதோடு ஆதனங்களை வெவ்வேறாக அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ஆதன உரிமையாளர்கள் உள்ளிட்ட தகவல்களுடன் விபர அறிக்கை அனுப்பப்படவில்லை என்பதோடு, 2024.12.31 ஆம் திகதிக்கு சோலை வரி நிலுவைத் தொகை அறவிடல்/ஆதனக் கணக்கெடுப்புக்கு 2025 ஆம் ஆண்டுக்குரியதாக ஆக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மேற்குறிப்பிட்ட கடிதம் மூலம் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.
- வருமான நிலுவைத் தொகையை அறவிடும் திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பான முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

❖ <u>**விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள திகதி - 2025.10.08**</u>

**a. <u>கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் (கணக்காய்வாளரின் அவதானிப்புக்கு அமைய)</u>**

- கடந்த அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது (2025.02.25) வழங்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கு அமைய நிலுவை வருமான வரியை அறவிடும் திட்டத்துக்கு சரியான காலப் பகுப்பாய்வு தயார் செய்யப்படாமையால், உரிய பொறுப்புக்களை கையளித்து இதன் முன்னேற்றத்தை பின்னாய்வு செய்தில் சிரமங்கள் ஏற்படுகின்றது என்பதையும்.

- கொழும்பு மாநகர சபையின் 47 பிரிவுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ஒட்டுமொத்த நிலுவை வருமான வரித் தொகை சுமார் 4 பில்லின் ஆகுமெனவும்.
- கடந்த குழுக் கூட்டத்தில் 6 மாத காலப்பகுதியில் நிலுவை வரி வருமானத்தை சேகரித்து முடிப்பதென்று உடன்பாடு எட்டப்பட்ட கொழும்பு கோட்டை பிரிவின் சுமூர் 610 நிலுவை வருமான வரியில், இந்த மாதம் யூன் மாதமாகையில் 53 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.
- வருமானத்ததை சேகரித்தல் மற்றும் இதற்கான பின்னாய்வு செயன்முறையில் காணப்படும் பிரச்சினைகனை தீர்ப்பதற்கு தற்போதைய நிருவாக அதிகாரத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள்.

**b. தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் (த.க.உ.) / கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.உ) விளக்கமளித்தல்.**

- மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தாதவர்களின் சொத்துக்களை தடை செய்யும் செயன்முறைக்கு அமைய நிலுவை வரி வருமானத்தை அறவிட முடியும்.
- வருடமொன்றில் ஐந்து தடவைகள் மேற்கொள்ளப்படும் சொத்துக்களை அடையாளம் காணும் மதிப்பீட்டுக்கு அமைய 2024.12.31ஆந் திகதியிலான நிலுவை மீது சொத்துக்களை தடை செய்யும் செயன்முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு கோட்டை பிரதேசத்தில் 3047 சொத்துக்களை வகைப்படுத்தி இந்த வருடம் செத்தெம்பர் மாதம் 30ஆந் திகதியில் இப்பிரிவிலிருந்து 148மில்லியன் நிலுவைப் பணத்தொகை அறவிடப்பட்டுள்ளது
- 47வது பிரிவில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சொத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை சில மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- தற்போது இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட KOICA நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டத்தில் வரி வருமானம் உள்ளிட்ட 4 வருமான வழிமுறைகள் உள்ளடக்கப்படுவதாகவும், இது நான்கு வருட காலப்பகுதியில் படிமுறை ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டமாகக் காணப்படுகின்றது.,
- புதிய முறைமை மற்றும் பழைய முறைமையை ஒருங்கிணைப்பது தொடர்பில் மாநகர சபையின் சார்பில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட நிலையியற் குழு மற்றும் உத்தியோகத்தர்களினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.
- கொழும்பு மாநகர சபைக்கு உரித்தான அனைத்து காணிகளினதும் நிலஅளவீடு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை இந்த வருடத்துக்குள் பூர்த்தி செய்து

நிலையான சொத்துக்களின் ஆவணத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்ப்பதுடன், இதன் மூலம் சட்டவிரோத நிர்மாணப் பணிகளை அடையாளம் காண முடியும்.

- சட்டவிரோத குடியிருப்பாளர்களை கிரமமாக மீள்குடியமர்த்தும் செயன்முறையை பின்பற்றுவது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், புதிதாக சட்டவிரோத நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்ட விரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- வருமானத்தை திரட்டும் பின்னாய்வு செயன்முறையில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் இது தொடர்பில் எடுக்கப்படும் செயன்முறைகள் தொடர்பிலான அறிக்கையை இது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள நிலையான குழுவினால் தயார் செய்யப்படும்.

என கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

சொத்து மதிப்பீட்டை காலத்துக்கு ஏற்ற முறையில் மேற்கொள்வதற்கு தற்போது நிறுவனத்தினுள் முறையானதொரு செயன்முறை தயார் செய்யப்படவில்லை எனவும், காலத்துக்கு ஏற்று விதத்தில் சொத்துக்களை மேற்பார்வை செய்து அறிக்கையிடுவதற்கான நிச்சயிக்கப்பட்டதொரு செயன்முறையை எதிர்காலத்தில் பின்பற்ற முடியுமெனில், தீர்வுகளை எட்ட முடியுமெனவும் குழு தெரிவித்தது.

### d. குழுவின் விதந்துரைகள்

1. KOICA நிறுவனத்துடன் தயார் செய்யப்படும் தரவு முறைமையின் ஊடாக வருமான வரியை திரட்டுவதிலான வினைத்திறனை விருத்தி செய்வதற்கான நிச்சயிக்கப்பட்ட செயன்முறையொன்றை தயார் செய்தல்.
2. கொழும்பு மாநகர சபையின் ஏனைய 78 வருமான தலைப்புகளுக்கும் வருமான வரியை திரட்டுவது தொடர்பிலான தரவு முறைமையொன்றை தாபிப்பது தொடர்பில் கருத்தில் கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நிலையியல் குழுவின் மூலம் குறிப்பிட்ட வருமானத் தலைப்புகளின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப முன்னுரிமையை வழங்கியவாறு வருமானத்தை திரட்டும் முறையான செயன்முறையொன்றை தயார் செய்தல்.
3. அடையாளம் காண முடியாத சொத்துக்கள் தொடர்பில் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய நிலையியல் குழுக்கள் ஊடாக தகுந்த செயன்முறையொன்றை தயார் செய்தல்.

ஆகிய விடயங்கள் தொடர்பில் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கான இயலுமை தொடர்பில் குழு வினவியதுடன், 03 மாத காலப்பகுதியினுள் (2026.01.08ஆந் திகதிக்கு முன்னர்) இது தொடர்பிலான இடைக்கால அறிக்கை மற்றும் 06 மாத காலப்பகுதியினுள் (2026.04.08ஆந் திகதிக்கு முன்னர்) இதன்

இறுதி அறிக்கையை குழுவுக்கு முன்வைப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உடன்பட்டார்.

**e. விதந்துரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவுக்கு அறிக்கையிடுதல்.**

கொழும்பு மா நகர சபையின் நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025/02 ஆம் இலக்க மற்றும் 2026.01.09 ஆந் திகதிய கடிதத்தில் பின்வரும் விடயங்ள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

1. கொழும்பு மாநகர சபையினுள் e-Tax முறைமையை தாபிப்பதற்கான மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கு KOICA நிறுவனம் 2026.01.05 ஆந் திகதி அடிப்படை திட்டமொன்றை வழங்கியுள்ளது.
2. வருமான குழுவானது வருமானம் திரட்டுவதை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான கொள்கை பிரகடனமொன்றை பொதுச் சபைக்கு முன்வைத்துள்ளது.
3. மதிப்பீட்டின் மூலம் அடையாளம் காண முடியாத 3,797 சொத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், இதில் முதலாவது படிமுறையாக 1,671 சொத்துக்கள் பற்றிய தகவல்கள் நகர ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 02. மாநகர சபைக்கு உரித்தான 168 காணிகள் பற்றிய பிரச்சினை

❖ <u>**விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள திகதி - 2025.02.25**</u>

**a. கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் ( கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுக்கு அமைவாக)**

- மாநகர சபைக்கு உரித்தான காணிகளின் காணி உரித்தினை நிர்ணயிப்பது தொடர்பிலான தற்போதைய முன்னேற்றம்.

**b. தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் (த.க.உ.) / கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.உ) விளக்கமளித்தல்.**

- ஆவணங்களை பரிசீலிக்கையில் குறிப்பிட்ட 168 காணிகளில் மாநகர சபைக்கு உரித்தான சொத்துக்களாக 132 காணிகள் மாத்திரம் காணப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது.

- காணிகளின் உரிமையை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு அறிவித்து நில அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- நில அளவைத் திணைக்களத்தின் தொழில்சார் நடவடிக்கைகள் காரணமாக நில அளவீட்டுப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளமையால், தனியார் நில அளவீட்டு நிறுவனங்களை இதற்கான பதிவு செய்து கொள்ளுதல்.
- நில அளவீட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த வருடத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- நில அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளும் அதேவேளை சட்டவிரோத குடியிருப்பாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

என பி.க.உ. / க.உ. தெரிவித்தார்.

### c. குழுவின் பரிந்துரைகள்

கொழும்பு மாநகர சபை வசமுள்ள இனங்காணப்பட்ட காணிகளில் அளவிடல் பணிகளை மேற்கொண்டு, அவற்றின் உரித்து நிர்ணயஞ் செய்யப்பட வேண்டுமென்பதை குழு அவதானித்தது.

### d. குழுவின் பரிந்துரைகள்

இனங்காணப்பட்ட காணிகளில் அளவிடல் பணிகளை நிறைவு செய்து, உரித்து நிர்ணயஞ் செய்வதுடன் தொடர்புடைய செயன்முறைக்காக கால வரையறையை தயாரித்து, ஒரு வாரத்திற்குள் (2025.03.04ஆந் திகதிக்கு முன்னர்) குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழு பரிந்துரைத்ததுடன், அதற்கு பி.க.அ. / க.அ. இணங்கினார்.

### e. பரிந்துரையை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடல்

கொழும்பு மாநகர சபை நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025ஆம் இலக்க மற்றும் 2025.03.15ஆந் திகதிய கடிதத்தால் காணி அளவிடல் மற்றும் ஆவணங்களை இற்றைப்படுத்தும் பணிகளை 2025ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்வதற்கு ஏற்புடைய செயற்பாட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 03. மோதர எலிஹவுஸ் காணி (Elie House)

❖ <u>விசாரிக்கப்பட்டத் திகதி – 2025.02.25</u>

### a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)

- இக்காணியை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட தொண்டு நிறுவனத்தால் 1997ஆம் ஆண்டு தொடக்கம் ஒப்பந்தக் காணி அளவான 50 பேர்ச்சசை விஞ்சி, சட்டவிரோதமாக மேலதிக ஆதன அளவுவை (40 பேர்ச்சஸ்) உடைமை கொண்டிருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளமை.
- இக்காணியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டு உடைமை கொண்டுள்ள ஆதனங்களில் வயோதிப இல்லமொன்றையும், முன்பள்ளியொன்றையும் நடத்திச் செல்வதால் அவ்வாதனங்களை சுவீகரிக்கும்போது தார்மீகப் பிரச்சினையொன்று எழுகின்றமை

### b. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்

- உரிய தொண்டு நிறுவனத்துடன் உள்ள குத்தகை ஒப்பந்த காலம் நிறைவுற்றுள்ளமையால் ஒப்பந்தத்தை நீடிப்பதற்காக சட்ட விரோதமாக உடைமை கொண்டிருந்த காலத்துடன் தொடர்புடைய 40 பேர்ச்சஸ் காணிக்கு வாடகையாக மதிப்பிடப்பட்ட 12 மில்லியன் தொகையை மாநகர சபைக்கு செலுத்துமாறு அந்நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டபோதும் நிறுவனம் அதற்கு உடன்படாததன் காரணமாக அவ்வாதனத்தை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,
- இவ்விடயம் தொடர்பாக அந்நிறுவனத்தால் கௌரவ ஆளுநருக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளும் வரை ஆதனத்தை சுவீகரிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,
- சட்ட விரோதமாக உடைமை கொண்டுள்ளவரிடம் சட்டவிரோத உடைமையின் பெறுமதியைச் சேர்த்து அவ்வாதனத்தை சட்ட ரீதியானதாக்கும் எண்ணத்தில் சட்ட விரோத உடைமையுடன் தொடர்புடைய பணத் தொகையை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இப்பணத் தொகை கொழும்பு மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானம் என்பதால், இதனை வாடகையாக அன்றி, நகர சபைக்கு ஏற்பட்ட நட்டமாகக் கருதி அபராதமாக அதனை அறவிட முடியுமெனவும்,

பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.

**c. குழுவின் அவதானிப்பு**

அக்காணியில் சட்டவிரோதமான நிர்மாணங்களை மேற்கொள்ளும்போது உரிய நடவடிக்கைககளை மேற்கொள்ளாததன் காரணமாக கொழும்பு மாநகர சபை தமது பணிப் பொறுப்பை புறக்கணித்துள்ளதாக குழு சுட்டிக்காட்டியது.

**d. குழுவின் பரிந்துரை**

1. இக்காணியில் சட்டவிரோதமாக உடைமை கொண்டுள்ள ஆதனம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு தொடர்பாக கௌரவ ஆளுநருடன் இடம்பெற உள்ள கலந்துரையாடலின் பின்னர், அவ்வாதனத்தை கொழும்பு மாநகர சபைக்கு சுவீகரிப்பது தொடர்பாக உடன்பாட்டுக்கு வந்து, அது தொடர்பாக குழுவுக்கு அறிவிக்குமாறும்,

2. அச்செயன்முறையின் பின்னர், மாநகர சபைக்குச் சொந்தமான காணியை சட்டவிரோதமாக உடைமை கொள்வதுடன் தொடர்புடையதாக கொழும்பு மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக ஒரு மாதத்திற்குள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்,

குழு பரிந்துரைத்ததுடன், பி.க. அ. / க.அ. அதற்கு  உடன்பட்டார்.

**e. பரிந்துரையை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடல்**

கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025 இலக்க மற்றும் 2025.03.15ஆந் திகதிய கடிதத்தில் பின்வரும் விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

1. சட்டவிரோதமாக உடைமை கொண்டுள்ள ஆதனத்தின் எல்லைகள் இடப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக அப்பகுதியுடன் தொடர்புடைய காணியின் திட்டத்தை தயாரித்தல் இடம்பெற்று வருகின்றமை.
2. சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட காணி அளவை மாநகர சபைக்கு சுவீகரிப்பதற்கு கட்டளையிடப்பட்டுள்ளதுடன், அக்காணிக்குரிய நிலுவை குத்தகைப் பணத்தை செலுத்துமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவித்துள்ளமை.

❖ <u>விசாரிக்கப்பட்டத் திகதி – 2025.10.08</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

- 2025ஆம் ஆண்டு 25ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது மோதர எலிஹவுஸ் காணி தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் முன்னேற்றம்

**b. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

- இக்காணிகளுக்கான திட்டமொன்று காணப்படவில்லை என்பதால் மீண்டும் அளவிட்டு, மூன்று காணித்துண்டுகளாக மூன்று திட்டங்களைத் தயாரித்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும்,
- காணியின் குத்தகையாளரான தொண்டு நிறுவனம், கௌரவ ஆளுநருக்கு சமர்ப்பித்த மேன்முறையீட்டை கருத்திற் கொண்டு அந்நிறுவனத்துடன் இணங்கியவாறு ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ள 50 பர்ச்சஸ் காணி தொடர்பாக மொத்த நிலுவைப் பணமும் ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது எனவும்,
- சட்டவிரோதமான உடைமையுடன் தொடர்புடைய அறவிடலுக்காக 12 மில்லியன் ரூபாவாக கணக்கிடப்பட்ட அபராத வட்டி அம்மேன்முறையீட்டுக்கமைவாக நியமிக்கப்பட்ட குழு மூலம் 1992ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் ஒவ்வொரு ஆண்டின் வாடகையை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் கணக்கிட்டு ரூ. 4.3 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளமை மற்றும் அதனை மாநகர சபையின் நிதி குழுவுக்கு மற்றும் பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் குத்தகைதாரரால் பயன்படுத்தப்படும் இரு காணித் துண்டுகளும் இணைந்ததாக 90 பேர்ச்சஸிற்காக குறித்த குத்தகையாளருடன் முறையானவாறு ஒப்பந்தம் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும்,
- இந்நிறுவனம் பிரதேசத்தின் பொது மக்களுக்கு சேவையாற்றும் தொண்டு நிறுவனம் என்பதால் அதன் இருப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**c. குழுவின் அவதானிப்பு**

இக்காணியை புதிதாக அளவிடும்போது அடையாளங் காணப்பட்ட 50 பர்ச்சஸ் காணியை வருமானம் ஈட்டும் வழியாக பயன்படுத்த வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது.

**d. குழுவின் பரிந்துரை**

ஏற்புடைய குத்தகையாளரிடமிருந்து அபராத வட்டியை அறவிடுவதற்கான விடயத்தை கொழும்பு மாநகர சபையின் நிதி குழுவின் மற்றும் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர், அது தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானம் மற்றும் அதற்கமைவாக மேற்கொள்ளும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றம் தொடர்பாக 2025.12.31ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு க.அ. குழுவுடன் இணங்கினார்.

**e. பரிந்துரையை நிறைவேற்றுவதில் நிலவும் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடல்**

ஏற்புடைய குத்தகைதாரரிடமிருந்து அபராத வட்டியை அறவிடுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு மாநகர சபையின் நிதி குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025/02 இலக்க மற்றும் 2026.01.06ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 04. பொரளை மயான பூமி கட்டுப்பாட்டாளரின் உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் காணியை முறையற்ற வகையில் பயன்படுத்தல்

❖ <u>**விசாரிக்கப்பட்டத் திகதி - 2025.02.25**</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

- கொழும்பு மாநகர சபையின் ஊழியர் ஒருவர், பொரளை மயான பூமி கட்டுப்பாட்டாளரின் உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் உரிய அரச காணிகளைப் பயன்படுத்தி "சுப்ரீம் மலர்சாலை" எனும் தனியார் மலர்ச்சாலையொன்றை நடத்தி வருகின்றமை கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை.
- இது தொடர்பாக 2023.06.06ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது பரிந்துரைகள் வழங்கப்பட்டபோதும் அது தொடர்பாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை.

## b. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) /கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்

- இவ்வியாபாரத்திற்கு நகர சபையால் தேவையான அனுமதிப் பத்திரங்கள் பெறப்படவில்லை என்பதுடன், பொரளை மயானத்தின் நிருவாகியாக கடமையாற்றிய தொடர்புடைய ஊழியரினால் அவரது குடும்ப அங்கத்தவர்களின் பங்குடைமையாக செயற்படுத்தியுள்ளதாகவும்,
- இவ்வியாபாரத்திற்காக மயான நிருவாகியின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் பயன்படுத்தியுள்ளதாகவும்,
- பிரதான உள்ளக கணக்காய்வாளரின் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை நியமித்து இது தொடர்பான பூர்வாங்க விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் விதப்புரைகளாக நகரசபைக்கு குறித்த காணியை சுவீகரிப்பதற்கும் ஊழியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ள போதிலும், இந்த நபருக்கெதிராக முறையான குற்றப்பத்திரம் அப்போது வழங்கப்படவில்லை என்றும்,
- பின்னர் 2020 ஆம் ஆண்டில் பிரச்சினையுடன் தொடர்புடைய ஊழியர் பணித்தடைக்கு உட்படுத்தப்பட்டதோடு, அதற்கெதிராக குறித்த ஊழியர் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அப்போது நியமிக்கப்பட்டிருந்த மாநகர ஆணையாளருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் ஏற்பட்ட இணக்கப்பட்டிற்கு அமைவாக அவ்வழக்கு வாபஸ்பெறப்பட்டு குறித்த ஊழியரை மீண்டும் கடமையில் அமர்த்தியுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

## c. குழுவின் அவதானிப்புக்கள்

பிரச்சினைக்குரிய ஊழியர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையை கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## d. குழுவின் விதப்புரைகள்

1. இவ்விடயம் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொதுநிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒழுக்காற்று குழாத்தில் இருந்து தேவையான அலுவலர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, குழுவால் முன்வைக்கப்பட்ட விதப்புரையுடன் பொதுநிருவாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளார்.
2. இவ்விடயம் தொடர்பாக முழுமையான விசாரணையை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமித்து அதன் விசாரணை அறிக்கையை இரு வாரங்களுக்குள் (2025. 03.11 ஆம் திகிக்கு முன்னராக) குழுவிற்கு ஆற்றுப்படுத்தமாறு குழுவால்

முன்வைக்கப்பட்ட விதப்புரைக்கு மேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் இணங்கியுள்ளார்.

**e. விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடல்**

- அமைச்சின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர் பட்டியலில் இருந்து பொருத்தமான அலுவலரொருவரை இந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு நியமித்துக் கொள்ளுமாறு பொதுநிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/7/4/8/1-2025 ஆம் இலக்க மற்றும் 2025.03.24 ஆம் திகதிய கடிதம் மூலமாக கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் தெளிவுபடுத்தப்பட்டுள்ளார்.
- இந்த விடயம் தொடர்பாக முழுமையான விசாரணையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மூன்று பேர்களைக் கொண்ட குழு வழங்கிய விதப்புரைளுடன் கூடிய விரிவான இறுதி அறிக்கை மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரின் CSWP/FIN-AP/01/FI/18(D) ஆம் இலக்க மற்றும் 2025.10.03 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **<u>விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி - 2025.02.27</u>**

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுக்கு அமைவாக)**

- கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கீழ் கம்பனியொன்றாகப் பதிவு செய்துள்ள போதிலும் தேவையான ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத நிறுவனத்திற்கு மலர்சாலையை நடாத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் அளித்துள்ளமை மற்றும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஊழியரை மீளப் பணியில் அமர்த்தியதன் மூலம் நகரசபை பாரதூரமான குற்றமொன்றைச் செய்துள்ளது.
- குறித்த சட்டவிரோத ஆதனங்களை நகர சபைக்கு சுவீகரிப்பது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

**b. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) /கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**

- சம்பந்தப்பட்ட தரப்பினரால் குறித்த ஆதனத்தின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பது போலி உறுதியாகும் என்பதை காணிப் பதிவாளர் அலுவலகம் மூலம் உறுதிசெய்து கொண்டதாகவும்,
- குறித்த வளாகத்தில் அமைந்துள்ள மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனமாகிய மயான நிருவாக உத்தியோகபூர்வ இல்லத்தை 1998.08.11 ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வ இல்ல உடன்படிக்கையின் மூலமாக பிரச்சினையுடன்

தொடர்புடைய நபருக்கு கையுதிர்ப்புச் செய்ததன் பின்னர் இச்சட்டவிரோத நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதுடன் குறித்த மலர்சாலைக்கு இல. 2-2 எனும் போலியான சோலை வரி இலக்கமும் மலர்சாலையின் பணிகளுக்காக உத்தியோகபூர்வ இல்லமும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

- பிரச்சினையுடன் தொடர்புடைய நபர் தமது உரிமையை மறைப்பதற்காக இவ்வியாபாரத்தின் பெயர் மற்றும் உடமையை அடிக்கடி மாற்றியுள்ளார் என்றும்,
- பிரச்சினையுடன் தொடர்புடைய நபர் மயானத்தில் சேவைகளை வழங்குவதற்காக போலியான பற்றுச் சீட்டுக்களை வழங்கி பணம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டு தொடர்பாக பணித்தடை செய்துள்ளமை மற்றும் அவருக்கெதிராக இன்னும் பல முறைகேடுகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாகவும்,
- உள்ளக ஒழுக்காற்று விசாரணையொன்றின் மூலம் பணித்தடை செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை வழங்கியுள்ள போதிலும் அதனைப் பொறுப்பேற்காது தொடர்ச்சியாக தவிர்த்து வந்துள்ளதுடன், பின்னர் இது தொடர்பாக அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும்,

முன்னாள் மாநகர ஆணையாளராக கடமையாற்றிய (திருமதி) கலாநிதி ரோஷனீ திசாநாயக்க அவர்கள் குழுவின் முன்பாக விடயங்களை வெளிப்படுத்தினார்.

- சம்பந்தப்பட்ட நபர் பணித்தடை செய்யப்பட்டதற்கு எதிராக தாக்கல்செய்துள்ள வழக்கை மீளப்பெறுகையில் அடுத்துவரும் மாநகர ஆணையாளருடன் ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டு நிபந்தனைகளான அவரை மீளப் பணியமர்த்துதல், இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் குற்றப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருந்ததுடன், குறித்த இணக்கப்பாட்டு நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்துள்ளதாகவும் கொழும்பு மாநகர சபையின் அலுவலர்கள் தெரிவித்தார்கள்.
- சுப்ரீம் மலர்ச்சாலை அமைந்துள்ள காணி மாநகர சபைக்குரிய ஆதனம் என்பதை மாநகர சபையில் காணப்பட்ட 11 ஆவணங்கள் மூலமாக அபோதைய மாநகர மதிப்பீட்டாளரால் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக முன்னாள் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.
- குறித்த சட்டவிரோதமான கட்டிடம் அமைந்துள்ள காணி கொழும்பு மாநகர சபைக்கு ஆட்சியுரிமை மாத்திரம் காணப்படுகின்ற அரச காணி என்பதால் இது தொடர்பாக மாநகர சபையின் உரிமையை காண்பிப்பதற்கான சாட்டுதல் உறுதியொன்றை வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இது வரையிலும் அதற்கான ஆவணம் கிடைக்கப்பெறவில்லை என பி.க.அ./க.அ. தெரிவித்தார்.
- கொழும்பு மாநகர சபையின் மூலமாக இந்த மலர்ச்சாலை வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை என்பதாகவும் கொழும்பு மாநகர சபையின் அலுவலர்கள் இதன்போது உறுதிப்படுத்தினார்கள்.

**c. குழுவின் அவதானிப்புக்கள்**

காலம் தாழ்த்தாது முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பூர்வாங்க விசாரணை அறிக்கையில் விதந்துரைத்துள்ள போதிலும், இது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்காமை, அப்போது கடமையாற்றிய மாநகர ஆணையாளர் பொதுவான விசாரணை நடைமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை குழுவால் அவதானிக்கப்பட்டது.

**d. குழுவின் விதப்புரைகள்**

1. குறித்த ஊழியருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதால், அப்போது கடமையாற்றிய மாநகர ஆணையாளர் உட்பட நிருவாகத்திற்குப் பொறுப்பாக காணப்பட்ட ஏனைய அலுவலர்கள் குறித்த விடயம் தொடர்பாக சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்களா என்பதுடன் குறித்த விடயம் தொடர்பாக மேற்படி அலுவலர்கள் வேண்டுமென்றே யாதேனும் தவறவிடுதல் அல்லது தவறு செய்துள்ளார்களா என்பதையும், ஆமெனில், மேற்படி அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டியுள்ள நடவடிக்கைகள் யாவையென்கின்ற விடயங்கள் தொடர்பாக 2025.02.25 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் மேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் சமரப்பிக்க இணங்கியுள்ள விசாரணை அறிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் குழுவால் அறிவுத்தல் வழங்கப்பட்டது.

2. இந்த விடயத்துடன் தொடர்புடைய மயான நிருவாக அலுவலர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையினை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையினை ஒரு வாரத்திற்குள் (2025.03.04 ஆம் திகதிக்கு முன்னராக) வழங்குமாறும்,

3. பிரச்சினையுடன் தொடர்புடைய மலர்ச்சாலை வியாபாரமானது சட்டவிரோதமானது என்பது உறுதியாகியுள்ளதால் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாக மேற்படி வியாபாரத்தை தடைசெய்வது தொடர்பான நடவடிக்கைகளை 2025.02.28 ஆம் திகதியன்று ஆரம்பிக்குமாறும் ,

   குழுவினால் விதந்துரைக்கப்பட்டதுடன் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரும் இதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளார்.

4. முன்னாள் மாநகர ஆணையாளர் (திருமதி) கலாநிதி ரோஷனி திசாநாயக்க அவர்கள் குழுவின் விசாரணை நடவடிக்கைகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நன்றிகளை தெரிவித்த குழு, அவருக்கான பாராட்டுக் கடிதமொன்றை வழங்குவதற்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

**e. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்குஅறிக்கையிடல்**

1. மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரின் CSWP/FIN-AP/01/FI/18(D) மற்றும் 2025.10.03ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கையில், குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
2. முறையான விடுமுறை அனுமதியின்றி 2025.02.27ஆந் திகதி முதல் கடமைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால், சம்பந்தப்பட்ட மயான நிர்வாகிக்கு கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் 2025.03.04ஆந் திகதியன்று பதவி வெறிதாக்கலுக்கான அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025 மற்றும் 2025.03.15ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.
3. அனுமதிப்பத்திரமின்றி அருவருப்பான கைத்தொழில் அல்லது வியாபாரத்திற்காக இடமொன்றைப் பயன்படுத்தியமை தொடர்பில், 2025.03.07ஆந் திகதியன்று கொழும்பு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் 12970/25 எனும் இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025 மற்றும் 2025.03.15ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.
4. முன்னால் மாநகர ஆணையாளர் கலாநிதி ரோஷனீ திசாநாயக்க அவர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழின் பிரதியொன்று, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளரின் (மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி) PL/7/4/8/1-2025 மற்றும் 2025.05.08 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.10.08</u>**

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ) (அவதானிப்புகளின் பிரகாரம்**

- பொரளை மயான நிர்வாகியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் காணியைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக 2025 பெப்புருவரி 25 மற்றும் 27ஆந் திகதிகளில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களின் போது வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்.

**b. பிரதம கணக்கீட்டு அலுவலர் (அ.க) கணக்கீட்டு அலுவலரின் /(அ.க.பி) தெளிவுபடுத்தல்கள்**

- 2025.02.25 மற்றும் 27ஆந் திகதிகளில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட விதப்புரைகளுக்கமைய, இது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கை 2025.10.07ஆந் திகதியன்று குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தக்குழு அறிக்கையின் விதப்புரைகளுக்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் தெரிவித்தார்.
- பிரச்சனைக்குரிய உத்தியோகத்தர் (மயான நிர்வாகி), அனுமதியின்றி அதிகளவிலான விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டு கடமைக்குச் சமூகமளிக்காத போக்கைக் காட்டியுள்ளதால், 2025 மாச்சு 04ஆந் திகதி முதல் அவர் பதவியை வெறிதாக்கிச் சென்றவராகக் கருதி அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அது தடையாக இருக்குமென ஒழுக்காற்று விசாரணைச் சபையினால் அறிவிக்கப்பட்டதையடுத்து, பதவியை வெறிதாக்கிச் சென்றமை என்ற தீர்மானத்தை இரத்துச் செய்து, குறித்த திகதி முதலே நடைமுறைக்கு வரும் வகையில் அந்த உத்தியோகத்தருக்கு பணித்தடைக் கட்டளை கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்டதாகவும்,
- கொழும்பு மாநகர சபையினால் இருப்பாட்சிக்குட்பட்டு வரும் குறித்த காணியானது, பிரதேச செயலாளரின் அளவை வரைபடத்தில் அரசாங்கக் காணியாகக் காட்டப்பட்டுள்ளதென்றும், அதனை கொழும்பு மாநகர சபையின் கீழ் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்,

பி.க.அ./ க.அ. தெரிவித்தார்.

**c. குழுவின் அவதானிப்புகள்**

- 2025 பெப்புருவரி 25 மற்றும் 27ஆந் திகதிகளில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வினைத்திறனற்ற முறையில் செயற்பட்டுள்ளனர்.
- தற்போதுள்ள துணை விதிகளின் கீழ் மலர்ச்சாலையொன்றை நடத்துவதை உள்ளடக்கும் வகையில் சட்டரீதிச் சட்டகமொன்று இயற்றப்படவில்லை என்பதால், சம்பந்தப்பட்ட சட்டக் கட்டமைப்புகளை இற்றைப்படுத்துவதன் முக்கியத்துவம்.

**d. குழுவின் விதப்புரைகள்**

1. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி, பிணக்குக்குரிய ஆதனத்தை கொழும்பு மாநகர சபைக்குச் சுவீகரிக்கும் நடவடிக்கையை துரிதமாக முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு க.அ. குழுவுடன் இணங்கினார்.
2. கொழும்பு மாநகர சபை இனிவரும் காலத்தில் குழுவிற்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், இச்செயற்பாட்டின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காகத் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரையும் அழைப்பதற்குக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

**e. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடல்**

மேற்குறிப்பிட்ட விதப்புரைகள் தொடர்பான முன்னேற்றத்தைக் கண்டறிவதற்காகக் கொழும்பு மாநகர சபையை மீண்டும் குழுவின் முன்னிலையில் அழைக்க வேண்டுமென்று குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

## 05. பொரளை மயானத்தில் உடல்களை அடக்கம் செய்வதற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அஸ்திகளை வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்கள்.

❖ <u>**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.02.25**</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

பொரளை மயானத்தில் நினைவுத் தூபிகளை அமைப்பதற்குக் காணித் துண்டுகளை வழங்கும் நடைமுறை.

**b. பிரதம கணக்கீட்டு அலுவலர் (அ.க) கணக்கீட்டு அலுவலரின் /(அ.க.பி) தெளிவுபடுத்தல்கள்**

- பொரளை மயானத்தில் நினைவுத் தூபிகளை அமைப்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவிற்கேற்ப உறுதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படுகிறது என்றும்,
- 1872ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 9514 உறுதிப்பத்திரங்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன என்றும்,

- இதன்கீழ் 2 x 2 அடி காணித் துண்டு ஒன்றிற்கு 500,000 ரூபாயும் அதனுடன் சேர்த்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் (VAT) அறவிடப்படும் என்றும்,
- இந்த உறுதிப்பத்திரங்களை விற்பனை செய்யவோ அல்லது மீண்டும் ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்யவோ முடியாது என்றும்,

பி.க. அ. / க. அ. தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

பொரளை மயானத்தில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை நினைவுத் தூபிகளை அமைப்பதற்காகத் தனிநபர்களுக்கு உறுதிப்பத்திரம் மூலம் வழங்குவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

### d. குழுவின் விதப்புரைகள்

பொரளை மயானத்தில் நினைவுத் தூபிகளை அமைப்பதற்குக் காணித் துண்டுகளை ஒப்படைக்கும் போது வழங்கப்பட்ட உறுதிப்பத்திரங்கள் தொடர்பான தற்போதைய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை ஒரு வாரத்திற்குள் (2025.03.04ஆந் திகதிக்கு முன்னர்) குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு விதப்புரை வழங்கியதுடன், அதற்கு பி.க. அ. / க. அ. இணங்கினார்.

### e. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடல்

உறுதிப்பத்திரங்களை வழங்கும் போது பதிவு செய்யப்படும் பதிவேடுகளில் உள்ள தகவல்கள் குறித்த அறிக்கையொன்று, கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025 மற்றும் 2025.03.15ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கமைவாக,

- எவ்விதத் தகவல்களையும் கண்டறிய முடியாத 07ஆம் இலக்கப் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடங்கியுள்ளதாகக் கருதப்படும் 959 உறுதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,
- குறித்த உறுதிப்பத்திர இலக்கங்களை உடையவர்கள் யாரேனும் இருப்பின், அதன் பிரதியொன்றை மயான நிர்வாகியிடம் ஒப்படைக்குமாறு கோரும் அறிவித்தல் பொரளை பொது மயானத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு, பகிரங்க இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களிலும் அதனை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.10.08</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

பொரளை மயானத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பான வரைபடங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல்.

**b. பிரதம கணக்கீட்டு அலுவலர் (அ.க) கணக்கீட்டு அலுவலரின் /(அ.க.பி) தெளிவுபடுத்தல்கள்**

- தற்போது பொரளை மயானத்தின் வரைபடங்களை இனங்காணுதல் மற்றும் அது தொடர்பான தரவுக் கட்டமைப்பொன்றை நிறுவி, அதில் தகவல்களைப் பதிவேற்றும் பணிகள் சுமார் 90% நிறைவடைந்துள்ளன எனவும்,
- வரைபடங்களைப் பரிசோதித்து உறுதிப்பத்திரங்களை இலக்கமிடுதல் மற்றும் காணித் துண்டுகளைப் பௌதீக ரீதியாக இலக்கமிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும்

பி.க.உ. / க.உ. தெரிவித்தார்.

**c. குழுவின் அவதானிப்புகள்**

பொரளை மயானத்தின் நிலப்பரப்பை முகாமைத்துவம் செய்வதற்குச் சிறந்த வேலைத்திட்டமொன்று இருக்க வேண்டும்.

**d. குழுவின் விதப்புரைகள்**

முன்மொழியப்பட்ட தீர்வு மற்றும் அது தொடர்பான வேலைத்திட்டத்துடனான முன்னேற்றத்தை 1 ½ மாத காலத்திற்குள் (2025.11.22ஆந் திகதிக்கு முன்னர்) குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு விதப்புரை வழங்கியதுடன், க. அ. அதற்கு இணங்கினார்.

**e. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடல்**

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025/02 மற்றும் 2025.11.17ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பின்வரும் விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன:

- பொரளை மயானத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 40% மாத்திரம் கொழும்பு மாநகர சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. ஏனைய மத சமூகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள நிலப்பரப்பிற்குள் நினைவுத்தூபிகளை அமைப்பதிலோ அல்லது அடக்கம் செய்வதற்கான பகுதிகளை ஒதுக்குவதிலோ கொழும்பு மாநகர சபை எவ்வித தலையீட்டையும் மேற்கொள்வதில்லை.
- கிடைக்கப்பெற்ற மற்றும் கண்டறியப்பட்ட தகவல்களைக் கொண்டு தற்போது கணினி மயப்படுத்தப்பட்டுள்ள தரவுகளுக்கமைய, வரைபடங்களை மீண்டும் பூர்த்தி செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- மயானத்திற்குள் தற்போது எஞ்சியுள்ள இடவசதி குறைவாக இருப்பதால், 2x2 அடி அளவிலான காணித் துண்டுகளை வழங்கும் வசதியைத் திருத்தியமைப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
- அளிப்புப் பத்திரங்களை வழங்குவது தொடர்பான சட்டக் கட்டமைப்பை ஒழுங்குறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது.
- மயானம் தொடர்பான தரவுக்கட்டமைப்பு மற்றும் வரைபடத் தொகுதியை மீளமைக்கும் பணிகள் 06 மாத காலத்திற்குள் நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
- மயானத்தின் செயற்பாடுகளைக் கண்காணித்துச் சரியான முறையில் முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

## 06. கழிவுநீர் உந்தி நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.02.25</u>**

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

- கொம்பனித் தெருவிலுள்ள கழிவுநீர் உந்தி நிலையத்தின் தற்போதைய நிலைமை
- நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தற்போதைய நிலைமை

**b. பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின்(க.அ) தெளிவுபடுத்தல்கள்**

- கொம்பனித் தெருவிலுள்ள கழிவுநீர் உந்தி நிலையத்தின் கழிவு நீரை பேர வாவிக்கு விடுவிக்காது ஆழ்கடலுக்கு விடுவிப்பதாகவும்,
- நூறு வருடங்களை விடவும் பழமையான கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டதோடு, வெள்ளவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள கொழும்பு மாநகரசபைக்குரிய விளையாட்டு மைதானமானது அதற்கு மிகப்பொருத்தமான இடம் என்று அடையாளங்காணப்பட்டதாகவும்,
- இருப்பினும், மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாக அந்த விளையாட்டு மைதானத்தினது மாற்று இடமாக அருகிலுள்ள காணியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சிற்குரிய காணி ஒன்றினை அதற்காக வழங்குவதற்கு இணங்கினாலும் அதனை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனமையால் கருத்திட்டத்தை இடைநடுவே நிறுத்துவதற்கு நேர்ந்ததாகவும் அதனால், கருத்திட்டத்தின் ஒப்பந்தக்காரருக்கு அதுவரையில் அவரால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள நேர்ந்ததாகவும் பி.க.அ./க.அ.தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

- கொம்பனித் தெருவிலுள்ள கழிவுநீர் உந்தி நிலையத்தின் கழிவு நீரானது சுத்திகரிக்கப்படாது ஆழ்கடலுக்கு விடுவிக்கப்படுவதனால், வருங்காலத்தில் சூழல் பிரச்சினைகள் எழக்கூடும் என குழு அவதானித்தது.
- எழக்கூடிய பிரச்சனைகள் குறித்து சரியான சாத்தியவள அறிக்கையின் மூலம் சரியாக எதிர்வுகூறப்படாமல் வெள்ளவத்தை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையக் கருத்திட்டத்திற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டமையால், சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு திட்டங்களை வகுப்பதற்காக செலவாகிய ரூபா.619 மில்லியன் தொகையை இழப்பீடாகச் செலுத்த நேர்ந்திருப்பதும் சம்பந்தப்பட்ட நிறுவனம் இது குறித்து பொறுப்பற்றுச் செயற்பட்டமை குறித்தும் குழு தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தது.

### d. குழுவின் விதப்புரைகள்

1. கழிவு நீர் சுத்திகரிக்கப்படாது ஆழ்கடலுக்கு விடுவிக்கப்படுவதனைத் தடுத்து நிறுத்தி அதுதொடர்பில் உகந்த திட்டங்களை வகுக்க வேண்டும் எனவும்
2. உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னர் பொதுக்குழு மீளத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட பின்னர் வெள்ளவத்தை கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையக் கருத்திட்டத்தை மீள ஆரம்பிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து தேடியறிய வேண்டும் என குழு தீர்மானித்தது.

**e. விதப்புரைகளை நிறவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடல்**

- முன்னேற்றம் குறித்து விசாரிப்பதற்கு குழு விதப்புரைகளை வழங்கவில்லை.

## 07. வாகன தரிப்பிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வாடகை அறவிடுவதில் உள்ள பலவீனங்கள்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.02.27</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)**

- வாகனத் தரிப்பிட வாடகை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31ஆந் திகதி ஆகும்போது ரூ.590,571,051 தொகை நிலுவை வாகனத் தரிப்பிட வாடகையானது அறவிட இருந்தமை.
- நிலுவை வாகனத் தரிப்பிட வாடகைத் தொகை செலுத்த வேண்டியுள்ள சில வாகனங்கள் தரித்து வைத்திருக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மீண்டும் மீண்டும் வழங்கியிருந்தமை.
- கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு வாகனங்களை நிறுத்துவதற்காக மாநகர சபையினால் வழங்கப்பட்டிருந்த இடங்களை சில உறுப்பினர்கள் வர்த்தக நிறுவனங்களுக்கு விற்பனை செய்து தனிப்பட்ட ரீதியில் வருமானங்களை ஈட்டியுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தடயவியல் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை.

**b. பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) தெளிவுபடுத்தல்கள்**

- கொவிட் பெருந்தொற்று நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஒப்பந்தக்காரர்கள் வாடகைப் பணத்தைத் திருத்தம் செய்யுமாறு கோரிக்கைகளை முன்வைத்ததோடு, அந்த திருத்த நடவடிக்கைகள் தாமதம் ஆகியமையாலும் சில குழுத்தீர்மானங்களின் அடிப்படையில் நிலுவைத்தொகைகள் நிலவும் நிறுவனங்ளுக்கு கடந்த காலப்பகுதிகளில் மீண்டும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும்,

- 2025ஆம் ஆண்டிற்கான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்கும்போது நிலுவைக் கொடுப்பனவுகள் உள்ள விலைமனுதாரர்களுக்கு அதற்காக முன்னிலை ஆக முடியாது என பெறுகை நிபந்தனை ஒன்றை விதித்ததாகவும் நிலுவையிலுள்ள அனைத்து தொகைகளையும் அறவிடுவதற்கு ஏற்புடைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், பி.க.அ./க.அ.தெரிவித்தார்.
- கொழும்பு நகர சபை உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் தங்களது அலுவலகங்களுக்கான வாகன தரிப்பிடங்களை மல்வத்தை வீதி கொழும்பு 11 இல் ஒதுக்கியிருந்தாலும் அவர்களது அலுவலகங்கள் அந்த இடங்களுக்கு அருகாமையில் இருக்கவில்லை என கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தடயவியல் கணக்காய்வு அறிக்கையின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டதாக முன்னாள் நகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

அலுவலகங்களுக்காக வழங்கப்பட்ட காணித்துண்டங்களை வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் அரச சொத்துக்களை கடுமையான விதத்தில் முறைகேடாகப் பயன்படுத்தல் என்றும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்றும் குழு அவதானித்தது.

### d. குழுவின் விதப்புரைகள்

இந்த விடயம் தொடர்பான தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து, அலுவலகங்களுக்காக வழங்கப்பட்ட காணித்துண்டங்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாக வெளிப்படுத்தப்படும் உறுப்பினர்களிடமிருந்து அதற்காக மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு விதப்புரை வழங்கியதோடு, பி.க.அ/க.அ அதற்கு இணங்கினார்.

### e. விதப்புரைகளை நிறவேற்றுவதிலுள்ள முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடல்

மிகைக் கட்டண அறிவித்தல்களை வழங்கும் நடவடிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதாகக் கொழும்பு நகர சபையின் நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025 இலக்கமுடையதும் 2025.03.15ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 08. பஸ் தரிப்பிட அறிவித்தல் பலகை கருத்திட்டம், Gantry சமிக்ஞை பலகைகள் மற்றும் Smart Street Light போன்ற கருத்திட்டங்கள் பற்றிய சிக்கல்கள்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி -2025.02.27</u>

### a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ( கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளின் பிரகாரம்)

- இந்த 3 கருத்திட்டங்களும் ஒரே தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருப்பதனால் அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட முறை.
- Smart Street Light எனும் கருத்திட்டத்தின் மூலம் அதியுயர் பாதுகாப்பு வலயங்களும் உள்ளடங்கும் வகையில் CCTV கமராக்களைப் பொருத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தலும் அதன் ஊடாக சேகரிக்கப்படும் தரவுகளின் அணுகல் வசதிகள் தனியார் நிறுவனத்திற்கு உரியதாக இருப்பதனால், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகி இருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளமை.
- விலைமனுக் கோரலுக்கான அறிவித்தலில் இந்த கருத்திட்டம் கொழும்பு மாநகர சபைக்கு செலவற்ற கருத்திட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் பின்னர் தெரு விளக்குத் தூண்களின் பராமரிப்பு செலவு பங்கினை மாநகர சபை ஏற்பதற்கு இணங்கியுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது.
- 2010ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட Gantry சமிக்ஞை பலகைகள் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு மீண்டும் ஏலங்களை கோராது ஒரே நிறுவனத்திற்கு 03 வருடங்களுக்கு வழங்கியிருத்தல்.

### b. பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ) தெளிவுபடுத்தல்கள்

- அரச தனியார் பங்குடைமை )PPP) அனுசரணைக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த கருத்திட்டத்திற்காக மூன்று சந்தர்ப்பங்களில் தனித்தனியாக விலைமனுக்கள் கோரப்பட்டு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருப்பதாகவும்,
- ஒரே நிறுவனத்திற்குரிய ஒரே பணிப்பாளர் சபையைக் கொண்டமைந்த, இருப்பினும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட 03 நிறுவனங்களுக்கு இந்த 03 ஒப்பந்தங்களும் வழங்கியிருப்பதாகவும்,

- கொழும்பு மாநகர சபையின் 12,000 தெரு விளக்குகளை ஸ்மார்ட் விளக்குகளாக மாற்றி பிரதான கட்டுப்பாட்டு மத்திய நிலையத்தின் ஊடாக அந்த தொகுதியை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட Smart Street Light கருத்திட்டத்திற்காக விலைமனுக்களைக் கோரும்போது, கருத்திட்டத்திற்கான மாற்று மேலதிக முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்ததாகவும் மாநகர சபைக்கு மேலதிக செலவின்றி தெருவிளக்குத் தூண்களில் 200 CCTV கமராக்களைப் பொருத்துவதற்கு பிரச்சனைக்குரிய நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அந்த நிறுவனங்களுக்கு கருத்திட்டத்தை வழங்கியதாகவும்,
- கொழும்பு மாநகர சபைக்குரிய கட்டுப்பாட்டு நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்படும், இந்த CCTV கமராக்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் உரித்து மாநகர சபைக்குச் சொந்தமானது என்றும் தயாரிக்கப்பட்ட தரவுகளை (processed data) மாத்திரம் வணிக நோக்கங்களுக்காக இந்த நிறுவனங்களுக்கு வழங்குவதாகவும்,
- பாதுகாப்பு நிலைமை தொடர்பில் நிலவும் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு கட்டுப்படும் வகையில் இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருப்பதாகவும்,
- 2015 ஆம் ஆண்டில் வீடு மற்றும் கட்டிட வரிப்பண பலகை இலக்கங்களை பொருத்தும் கருத்திட்டத்திற்காக விலைக்கேள்விகளைக் கோரும்போது புதிய நிபந்தனைகள் சில உள்ளடங்கலாக Gantry சமிக்ஞை பலகைகள் கருத்திட்டத்தின் தொடர்ச்சியை வழங்குதல் எனும் நிபந்தனையின் கீழ் அந்த கருத்திட்டத்தை இலவசமாக செய்வதற்கு பிரச்சனைக்குரிய கம்பனியினால் முன்வைக்கப்பட்ட மாற்று முன்மொழிவின் பிரகாரம் Gantry சமிக்ஞை பலகைகள் கருத்திட்டம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாகவும்

பி.க.அ/க.அ.தெரிவித்தார்.

- பிரச்சினைக்குரிய கருத்திட்டத்தின் மூலம் கொழும்பு மாநகர சபைக்கு 2.45 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக முன்னாள் மாநகரசபைப் பொருளாளர் அறிவித்திருந்ததாகவும்இந்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் , நடைமுறையில் இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுடன் முரண்படுவது அவதானிக்கப்பட்டமையினால் உடன்படிக்கை திருத்தப்பட வேண்டும் என தான் அக்காலத்தில் நிலவிய சபைக்கு அறிவித்ததாகவும்,
- பிரச்சினைக்குரிய நிறுவனத்தின் அதிகாரி ஒருவரினால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் கருத்திட்டத்திற்கு அமைவாக ஜனாதிபதி செயலகம்

அமைந்துள்ள பிரதேசத்தில் வீதி விளக்குகளின் நிருவாகம் குறித்த காலப் பகுதியில் மேற்படி நிறுவனத்திடம் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டமையின் காரணமாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்கள் எழுகின்றமையினால் அது தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தாகவும் ,

- நிலவிய சட்ட ஏற்பாடுகள் மற்றும் தனது எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரே எல்.ஈ.டீ வியாபார விளம்பரப் பதாதைகளை காட்சிப்படுத்துவதற்காக மேற்படி நிறுவனத்தினால் அகழ்வு நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் பொலிஸாரின் தலையீட்டில் அது நிறுத்தப்பட்டதாகவும்,
- பின்னர் மேற்படி கருத்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக குற்றஞ்சாட்டிய குறித்த நிறுவனம் தனக்கு எதிராக தனிப்பட்ட வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டதாகவும்,
- சபையின் முறையான அனுமதியின்றி போலிக் ,கையொப்பமிடப்பட்ட மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலம் குறித்த தனியார் நிறுவனத்திற்கு பல பில்லியன் ரூபாய் பெறுமதியான வியாபாரமொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக தன்னால் மேற்கொள்ளப்பட்ட இரகசியமாக விசாரணைகள் மூலமாக தெரிய வந்தாகவும் ,
- மேற்படி கருத்திட்டம் தொடர்பாக நிதி விசாரணைகளை மேற்கொள்வதற்கு பாரிய அளவிலான உதவி வழங்கிய தற்போதைய நகரசபை பொருளாளரான பெண் அதிகாரிக்கு தற்போது இடமாற்றமொன்று வழங்கப்பட்டுள்ளதால் அவரிடம் காணப்படுகின்ற நிதிமோசடி தொடர்பான முக்கியமான தகவல்கள் அடங்கிய ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் ,

முன்னாள் நகர ஆணையாளர் விளக்கமளித்தார்.

**c. குழுவின் அவதானிப்புக்கள்**

- Smart Street Light கருத்திட்டம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம், குறித்த செயற்பாட்டிற்காகவே புதிதாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நிறுவனம் என்பதால் விலை மனுவை மதிப்பிடுகையில் நிறுவனக் குழுமங்களின் (group of companies) அனுபவத்தினை விலைமனுவை மதிப்பிடுகையில் மேற்படி நிறுவனத்திற்கும் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் உகந்ததல்ல எனவும்,
- கென்ட்ரி (தாங்குச்சட்டகம் (சமிக்ஞை பதாதைகள் கருத்திட்டத்தின் கீழ் ஒப்பந்த நடவடிக்கைகள் நிறைவடையாத நிலையில் முற்றிலும் மாறுபட்ட

விடயப்பரப்பைக் கொண்ட பிறிதொரு கருத்திட்டத்தின் பணிகளுடன் தொடர்புபட்டதாக மீண்டும் அதன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருப்பது – பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணானது எள்பதையும், ஏனைய போட்டித் தன்மை வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நியாயமான சந்தர்ப்பத்தை இழக்கச் செய்கின்றது என்பதையும்,

குழு அவதானித்தது.

**d. குழுவின் பரிந்துரைகள்**

1. குழுவில் கண்டறியப்பட்ட போலிக் கையெழுத்திடப்பட்ட மின்னஞ்சல் செய்தி மூலம் வியாபார நடவடிக்கையொன்றிற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளமை (போலி ஆவணம் தயாரித்தல்) மற்றும் வீதி விளக்குகளின் நிர்வாகம் – வெளித்தரப்பினரிடம் காணப்படுதல் காரணமாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்கள் உருவாகின்றமை போன்ற விடயங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யும் நடவடிக்கையை ,2025.02.28ஆம் திகதி மேற்கொள்ளுமாறும்
2. நகரசபைப் பொருளாளர் இடமாற்றம் பெற்றுச் செல்கையில் அந்த அதிகாரியிடம் காணப்படும் நிதிமோசடிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களையும் எழுத்து மூலமாகவும் பாதுகாப்பாகவும் தகுந்த அதிகாரியொருவரிடம் கையளிக்குமாறும்,
3. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் சுருக்கக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான தற்கால நிலைமையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு அறிக்கையிடுமாறும்

குழு விதந்துரைத்ததுடன், நகரசபை ஆணையாளர் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

**e. விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடல்**

1. 07ஆம் திகதிகளில் குற்றப்புலனாய்வுத மற்றும் 2025.03.06ஂ திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபையின், நகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025ஆம் இலக்க மற்றும் 2025.03.15ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. கொழும்பு மாநகரசபையின் நகர ஆணையாளரின் SEC/SC12(RD09)/PF-Per.App.-MT இலக்க மற்றும் 2025.05.16 திகதிய கடிதம் மூலமாக 2005.05.14 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற நகரசபைபொருளாளரிடம் காணப்படுகின்ற நிதிமோசடிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களையும் எழுத்து மூலாகவும் பாதுகாப்பாகவும் பிரதான கணக்காளரிடம் (பெறுகை) கைளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ <u>**விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.10.08**</u>

a. **கலந்துரையாடப்பட்ட விடயங்கள் )கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கு அமைவாக(**

2025 பெப்ரவரி 27 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு இது தொடர்பாக வழங்கப்பட்ட விதந்துரைகளை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம்

b. **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.உ)/ கணக்கீட்டு உத்தியோகத்தர் (க.உ) விளக்கங்கள்**

- 2025.02.27ஆம் திகதியில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் மேற்படி விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட விதந்துரைகளின் படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் அந்த விசாரணை நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை விளக்குவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரிகள் அதுதொடர்பான தொழிநுட்ப அறிவு இல்லை எனக் குறிப்பிட்டதன் காரணமாக அது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்ததாகவும்,
- கடந்த குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் ஏற்பட்ட நிலைமையின் படி Smart Street Light கருத்திட்டத்திற்காக பிரச்சினைக்குரிய நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் நிதி ரீதியான சாத்தியக்கூறினை மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும் அக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக கருத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுமெனவும்,

பி.க.உ./க.உ. தெரிவித்தார்.

### c. குழுவின் அவதானிப்புகள்

விசாரணை நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, இக்கருத்திட்டம் குறித்து அறிந்துள்ள மற்றும் சரியான தகவல்களை வழங்கக்கூடிய அதிகாரிகளை விசாரணையில் பங்கேற்கச் செய்வதன் முக்கியத்துவத்தை குழு அவதானித்தது.

### d. குழுவின் பரிந்துரை

2025.02.27 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் குழுவில் முன்வைக்குமாறு விதந்துரை செய்யப்பட்ட, அத்தினத்தில் கலந்துரையாடப்பட்ட கணக்காய்வு அறிக்கை வரைவில் இந்த பிரச்சினை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தற்போதைய நிலைமை உள்ளடங்கியுள்ள அறிக்கை மற்றும் Smart Street Light கருத்திட்டம் தொடர்பான புதிய கருத்திட்டப் பிரேரணைகளின் நிதிச் சாத்தியப்பாடு குறித்த மதிப்பீடுகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் குழுவின் அறிக்கை என்பவற்றை ஒரு மாதத்திற்குள் (2025.11.08 ஆம் திகதிக்கு முன்னர்) குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கான குழுவின் விதந்துரைக்கு க.உ. இணக்கம் தெரிவித்தார்.

### e. விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடல்

2025.02.27 ஆம் திகதி கலந்துரையாடலுக்கு ஏதுவாக இருந்த SIF/A/AG/ABFD/2022/04 ஆம் இலக்க மற்றும் 2022.04.22 திகதிய தடயவியல் கணக்காய்வு அறிக்கைக்கு அமைவாக தற்போதைய நிலைமை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் MT/ADM/COPA/2025/02 ஆம் இலக்க மற்றும் 2025.11.06 ஆம் திகதிய கடித்தில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், பிரச்சினைக்குரிய நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட புதிய பிரேரணையின் நிதிச் சாத்தியப்பாடு குறித்து மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்படி பிரேரணையானது கொழும்பு மாநகர சபைக்கு நிதி ரீதியாக பாதகமானது என விதந்துரை செய்யப்பட்டுள்ளதால் மேற்கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்காக நகர பிதா மூலமாக சபைக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையின் பிரதியொன்றும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 09. பணியாட்டொகுதி வெற்றிடங்கள்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.10.08</u>

**a. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புக்கு அமைவாக)**

- கொழும்பு மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் 2025.06.30 ஆம் திகதியில் 3744 பதவிகள் வெற்றிடமாக உள்ளமை மற்றும் சிரேஷ்ட மட்டத்திலான 11 உத்தியோகத்தர்கள் ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் பணியாற்றுகிறார்கள் என அறிக்கையிடப்பட்டுள்ளமை.

**b. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் (பி.க.உ)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.உ) விளக்கங்கள்**

- ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் பிரதானமாக சாக்கடை மற்றும் திண்மக் கழிவுப்பொருட்கள் பிரிவுகளில் ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதாகவும் ,
- உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சுற்றிக்கைக்கு அமைவாக ஊழியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துகொள்வதற்காக இந்த சந்தர்ப்பத்தில் ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் வெவ்வேறு மட்டங்களில் ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும்,
- முறைமையான ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்குத் தேவையான அறிக்கைகளை மேல்மாகாண சபையின் விதந்துரையுடன் பிரதமரின் செயளாலரின் தலைமையிலான குழுவின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளதாகவும்,
- தற்போது ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் ஊழியர்களை மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்வதாகவும்,
- தொழிநுட்ப அதிகாரிகளின் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளுமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் ,

  பி.க.உ/.க.உ. தெரிவித்தார்.

- கொழும்பு மாநகர சபைக்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதி வெற்றிடங்களை நிரப்புதல் தற்போது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண பிரதம செயளாலர் குறிப்பிட்டார்-.

### c. குழுவின் அவதானிப்புகள்

மேற்படி காரணிக்கு அமைவாக, சிரேஷ்ட மட்ட அதிகாரிகளை ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான எந்தவித ஒதுக்கீடும் இல்லை என்பதை குழு அவதானித்தது.

### d. குழுவின் விதந்துரை

சிரேஷ்ட மட்ட அதிகாரிகள் ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருப்பின் அதற்குறிய காலகட்டம், ஆட்சேர்க்கப்பட்டுள்ள முறைமை மற்றும் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ள முறைமை தொடர்பாக குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு குழு முன்வைத்த விதந்துரைக்கு க.உ. இணக்கம் தெரிவித்தார்.

### e. விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடல்

இதுவரை குழுவுக்கு அறிக்கையிடப்படவில்லை.